[1971 டிசம்பர் 9

திரு. இரா. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, தற்சமயம் தூத்துக்குடிப் பகுதியில், தூத்துக்குடியிலிருந்து 15 மைல் தூரத்தில் அமைக்க இருக்கிறது இந்த விமானத் தளம். ஆனால் தூத்துக்குடித் துறைமுகத்திற்குத் தென்புறத்தில் நிலம் நிறைய இருக்கிறது. அந்த இடத்தில் மாற்றி அமைக்க சர்க்கார் முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அங்கே விமானத்தளம் அமைப்பது தூத்துக்குடிக்குச் செல்வதற்கு வசதியாகவும், திருநெல்வேலிக்குச் செல்ல வசதியாகவும் இடைப் பட்ட ஒரு இடத்தில் இருக்கின்ற வாகைகுளம் என்ற இடத்தில் விமானத் தளத்தை அமைக்க முடிவு கட்டி, மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் வற்புறுத்தி எழுதியிருக்கிறது. அவர்கள் இணக்கம் தெரிவிக்காமல் இருக்கிறார்கள். மேலும் மத்திய சர்க் காருக்கு மாநில அரசு எழுதி வற்புறுத்தும்.

Colachel Port

* 208—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Co-operation be pleased to state the steps taken by the Government to improve the Colachel Port ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : குளச்சல் துறை முகத்திற்கு கடற்கரைச்சாலை ஒன்று அமைக்க ரூபாய் 53,000-ல் மதிப்பீடு ஒன்றை அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, இந்தத் துறைமுக அபிவிருத்திக்கான கமிட்டி, குளச்சல் துறைமுகத்தைப் பார்வை யிட்டார்களா? அவர்கள் ஏதாவது அறிக்கை சமர்ப்பித்தார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஒரு கமிட்டி இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, குளச்சல் பகுதியில், மணவாளக்குறிச்சியிலிருந்து மத்திய சர்க்காரால் மணல் கம்பெனி ஒன்று நடத்தப்பட்டு, ஜப்பான் போன்ற வெளிநாடுகளுக்கு அந்த மணல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆனால் பொருள்களை அங்கிருந்து தூத்துக்குடிக்குக் கொண்டுபோய் அனுப்ப வேண்டியதாக இருப்பதால் பல சிரமங்கள் இருக்கின்றன. மணவாளக்குறிச்சியிலே ரூ. 20 கோடி செலவில் பெரிய கம்பெனி அமைத்து செயல்பட இருக்கிறார்கள். ஆகவே. குளச்சல் துறை முகத்தை அபிவிருத்தி செய்ய ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த 'இலுமனைட்' என்ற மணலை ஏற்றுமதி செய்ய வாய்ப்பு வசதியாக அமைக்கப் பட்டிருக்கிறது.